# பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச்

மெட்ரோபாலிடன் அலுவலகம், சினாட் செக்ரடேரியட், செயின்ட் தாமஸ் கம்யுனிடி, திருவல்லா, கேரளா, இந்தியா.

# மேய்ப்பனின் கடிதம்

**நவம்பர்/டிசம்பர் 2023**

**அனைத்து ஆர்ச் பேராயர்கள், பேராயர்கள், குருவானவர்கள் ,டீக்கன்கள், சுவிசேஷகர்கள், ஆர்டர்ஸ் ஆப் சிஸ்டேர்ஸ் மற்றும் பிலிவேர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச்சின் உலகெங்கிலும் உள்ள அனைத்து விசுவாசிகளுக்கும் பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஆசீர்வாதங்களும் வாழ்த்துக்களும் உண்டாவதாக. ஆமென்!**

**கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,**

**நவம்பர் மாத இறுதியை நெருங்கி டிசம்பர் மாதத்தை வரவேற்கத் நாம் தயாராகும் வேளையில் இந்த இரண்டு மாதங்களின் முக்கியத்துவத்தை நமக்கு நினைவூட்டுவது அவசியமாகும். நவம்பர் மாதம் புதிய வழிபாட்டு ஆண்டின் தொடக்கத்தைக் குறிக்கிறது அதே நேரத்தில் டிசம்பர் மாதம் என்பது வழிபாட்டு நாட்காட்டியின் மிக முக்கியமான நிகழ்வுகளில் ஒன்றை நினைவுகூரும் நேரம்: அதாவது கிறிஸ்துவின் பிறப்பு .**

**தேவனின் மக்களாகிய நம்மைப் பொறுத்தவரை நாம் பின்பற்றும் பொதுவான காலண்டரை விட சர்ச் காலண்டரைச் சுற்றியே நம் வாழ்க்கை சுழல்கிறது. இந்த புதிய வழிபாட்டு ஆண்டில் கிறிஸ்துவில் நமது வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக நாம் அர்ப்பணிப்புகளை மேற்கொள்வது முக்கியம். நம்மில் சிலர் தினசரி வேதம் வாசிப்பது, குடும்பமாக ஜெபிப்பது, தினசரி மனந்திரும்புவது, கர்த்தருக்கு தசமபாகம் கொடுப்பது, சர்ச் காலண்டரையும் அதன் நிகழ்வுகளையும் கவனித்து நடப்பது, மேலும் பிறருக்கு உதவுவது போன்ற ஒழுக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும், மேலும் இந்த பட்டியல் தொடரலாம்.**

**இந்த ஆவிக்குரிய காரியங்களில் உங்களை உண்மையாக அர்ப்பணித்து அவற்றை உங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாற்றுவதில் உறுதியாக இருக்குமாறு நான் உங்களை ஊக்குவிக்கிறேன். இவை அனைத்திற்கும் திறவுகோல் சர்ச் காலெண்டரை உண்மையாக பின்பற்றுவதாகும், அதை சர்ச் காலண்டர் உங்களுக்கு மிகவும் எளிதாக்கும். திருச்சபையால் விசேஷமாக வடிவமைக்கப்பட்ட காலெண்டரில் அனைத்து தவக்காலங்கள் மற்றும் பண்டிகைகள் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையை வடிவமைக்க கொடுக்கப்பட்டதாகும். நம்முடைய கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் பூலோக வாழ்க்கையில் நடந்த முக்கியமான நிகழ்வுகளை நினைவுகூரும் வகையில் திருச்சபை காலெண்டர் வடிவமைக்கபட்டுள்ளது. இது கிறிஸ்துவின் பிறப்பை அறிவிக்கும் பருவத்தில் தொடங்குகிறது, இதன் சிறப்பம்சமாக கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் உள்ளது.**

**கிறிஸ்துமஸ் நம்பிக்கை, சமாதானம் மற்றும் சந்தோஷம் ஆகிய சக்திவாய்ந்த செய்தியைக் கொண்டுள்ளது. தேவனின் அன்பு மற்றும் இரட்சிப்பின் மகத்தான செயலைப் பற்றி சிந்திக்க இது நமக்கு உதவுகிறது. நேட்டிவிட்டி (கிறிஸ்து பிறப்பு ) இரவில் மேய்ப்பர்களுக்கு தேவதூதர் செய்த அறிவிப்பு இந்த உணர்வை மிகச்சரியாகப் படம்பிடிக்கிறது: "எல்லா மக்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியைத் தரும் நற்செய்தியை நான்**

**கொண்டு வருகிறேன்". இரட்சகர் -ஆம் மேசியா, தேவன் - இன்று தாவீதின் நகரமாகிய பெத்லகேமில் பிறந்தார்!" ( பரி லூக்கா 2:10-11). தேவதூதர் அறிவித்தது போலவே இந்தச் செய்தி நாம் உட்பட அனைவருக்குமானது, மேலும் இது நம் இதயங்களை சந்தோஷத்தாலும் நம்பிக்கையாலும் நிரப்புகிறது. தேவன் நம் மனித வரலாற்றில் பிரவேசித்து இம்மானுவேல் ஆனார், "வார்த்தை மாம்சமாகி நமக்குள்ளே வாசம்பண்ணினார் என்று வேதம் கூறுவது போல், "தேவன் நம்மோடு இருக்கிறார்". (பரி யோவான் 1:14) தேவதூதர்கள், ஞானிகள் (சாஸ்திரிகள்) மற்றும் மேய்ப்பர்கள் கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றிய நற்செய்தியை தங்களுக்குள் வைத்திருக்கவில்லை ஆனால் அவர்கள் சத்தியத்தையும் தங்கள் அனுபவங்களையும் தாங்கள் சந்தித்த மற்றவர்களுடன் பகிர்ந்தனர். இந்த கிறிஸ்மஸ் பருவத்தில் மகிழ்ச்சியும் கொண்டாட்டமும் திருச்சபை, வீடுகள் மற்றும் நம் இதயங்களின் சுவர்களுக்கு அப்பால் விரிந்து நாம் அங்கம் வகிக்கும் சமூகத்தில் விரிவடையட்டும்.**

**கிறிஸ்துமஸ் தினத்தை முன்னிட்டு, உலகெங்கிலும் உள்ள ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவர்கள் நேட்டிவிட்டி அல்லது கிறிஸ்துமஸ் உபவாசத்தைக் கடைப்பிடிக்கின்றனர் இது தேவனுடைய குமாரன் மனித அவதாரமெடுத்து நம்மில் ஒருவராக மாறிய அற்புதமான அதிசயத்தை ஜெபத்துடன் தியானிக்க உதவும் ஒரு காலகட்டம் ஆகும். இந்த உபவாசத்தின் போது, கிறிஸ்து நம்மைப் போல் ஆனதைப் போல, நாமும் அவரைப் போல் ஆக வேண்டும் என்பதற்காக, நம்மை உள்ளும் புறமும் தயார்படுத்துகிறோம். இது நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கான நமது அர்ப்பணிப்பைப் புதுப்பிப்பதற்கான ஒரு உன்னத அழைப்பாகும். நம் வாழ்வில் சமநிலை, சமாதானம் மற்றும் பரிசுத்தத்தை மீட்டெடுப்பதற்கான நேரம் ஆகும்.**

**பெரும்பாலும், உபவாசம் உணவைத் தவிர்ப்பது என்று நினைக்கிறோம். ஆனால் பரி.ஜான் கிறிசோஸ்டம் நமக்கு அறிவுரை கூறுகிறார்: "உபவாசம் உணவைத் தவிர்ப்பதில் மட்டுமே உள்ளது என்று நினைப்பவர் தவறாக நினைக்கிறார்கள்; உண்மையான உபவாசம் தீமையிலிருந்து விலகுவதாகும்." எனவே, உணவில் இருந்து உபவாசம் இருக்கையில், பாவம், கோள்சொல்லுதல், பொறாமை, கோபம் மற்றும் நாம் அனைவரும் அடிக்கடி நம்மைக் கட்டுப்படுத்த அனுமதிக்கும் விஷயங்களிலிருந்தும் உபவாசம் இருக்க அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.**

**ஒரு திருச்சபையாக, சர்ச் காலெண்டரில் அதன் பல்வேறு காரியங்களிலும் தீவிரமாக பங்கேற்பதன் மூலம், கிறிஸ்துவின் ஒரே சரீரமாக வாழ்வதற்கான இந்த வாய்ப்புகள் அனைத்தையும் பயன்படுத்துவோம். இந்த புதிய வழிபாட்டு ஆண்டு செயல்பாட்டிற்கான அழைப்பாக இருக்கட்டும், தேவாலயத்தின் சுவர்களுக்கு அப்பால் செல்லவும், திருச்சபைகள் பணியில் செழிக்கவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் போல ஆவோம்!**

**சர்வ வல்லமையுள்ள தேவனின் சமாதானமும் கிருபையும் என்றென்றும் உங்களுடன் இருக்கட்டும்!**

**கிறிஸ்துவில் உங்கள் தந்தை,**

**தேதி**: 20-**11-**2023

**அத்தனேசியஸ் யோஹான் மெட்ரோபொலிட்டன் 1**

இடம்: பரிசுத்த சினாட்